# பத்திரிக்கை செய்தி

சேலம் மத்தியசிறை மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்ட சிறை, ஆத்தூர், கிளைச்சிறை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் காலியாக இருக்கும் சமையலர் மற்றும் தூய்மைப்பணியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடங்கள் பின்வரும் இனசுழற்சியில் நிரப்பப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு 01.07.2024 அன்றைய தேதியில் அதிகபட்ச வயது வரம்பு கீழ் குறிப்பிட்ட விபரப்படி இருத்தல் வேண்டும். தூய்மைப்பணியாளருக்கு தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். சமையலர் பணியிடத்திற்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தகுதியுள்ள நபர்கள் சம்மந்தப்பட்ட சாதிச் சான்றின் ஜெராக்ஸ் நகலுடன் சிறைக் கண்காணிப்பாளர், மத்தியசிறை, சேலம்-7 என்ற முகவரியிட்டு 15.10.2024-க்குள் சேலம் மத்தியசிறையில் கிடைக்கும் வண்ணம் அஞ்சல் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மேற்கண்ட பணியிடத்தினை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வின் தேதி மற்றும் நேர விபரம் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுகக்கு மட்டும் அஞ்சல் மூலம் பின்னர் தெரிவிக்கப்படும்.

## இனசுழற்சி

| | | |
|---|---|---|
| தூய்மைப் பணியாளர் | மத்திய சிறை, சேலம் | MBC&DC General & Non-Priority |
| தூய்மைப் பணியாளர் | மாவட்ட சிறை, ஆத்தூர் | BC (Other tnan Musilm)<br>General & Non- Priority |
| தூய்மைப் பணியாளர் | கிளைச்சிறை, கிருஷ்ணகிரி | `BC` Musilm - Priority |
| சமையலர் | கிளைச்சிறை, கிருஷ்ணகிரி | SC General & Non-Priority |

## வயது வரம்பு

| | SCA | SC | ST | MBC | BC | OC |
|---|---|---|---|---|---|---|
| Maximum | 37 | 37 | 37 | 34 | 34 | 32 |

27/09/24

சிறைக் கண்காணிப்பாளர் (பொ),
மத்திய சிறை, சேலம்-7.

27/9/24

Appointment 2023 / Paper News